[18th July 1962

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றி தனியாகத் தெரிவித்திருக்கிறார்கள். அது பரிசீலனை செய்யப்பட்டுவருகிறது. ஆனால் பேட்டை என்றால் கூட—மைலாப்பூர் போன்ற சிறு சிறு பகுதிகள் சென்னை நகரத்தைச் சேர்ந்தவை இல்லை என்று சொல்லு வது போல இருக்கிறது—அதுவும் திருநெல்வேலி நகரம்தான்.

Medical Colleges (reservation of seats)

* 378 *Q.*—Sri M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether any seats have been reserved in the Medical Colleges in the State for the Children of Ceylon repatriates; and

(*b*) from whom are they to get the certificates for establishing themselves as Ceylon repatriates or children of Ceylon repatriates?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM : (*a*) Yes, Sir.

(*b*) Officers of the Revenue Department not lower in rank than Deputy Tahsildars, I.C.S. or I.A.S. Officers and Deputy Secretaries to Government are competent to sign the certificate.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஸார், இலங்கையிலிருந்து நாடு திரும்பியவர்களுக்குத் தனியாக சீட் ஒதுக்கப்பட்டிருக்கிறது என் பது அமைச்சர் பதிலிலிருந்து தெரியவருகிறது. அவர்களைத் தேர்ந்தெடுப்பதில், இலங்கையிலிருந்து வந்தவர்களின் மனுக் களைத் தனியாக பரிசோதித்து, அவர்களில் யார் திறமையானவர் கள் என்று பார்த்துத் தேர்ந்தெடுக்கிறார்களா? அல்லது வேறு என்ன முறை கையாளப்படுகிறது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இலங்கையிலிருந்து வந்தவர்களுக்கு ஒரே ஒரு சீட்தான் இருக்கிறது. அதிலே யார் பெஸ்ட் மெரிட்டோடு இருக்கிறாரோ அவர் செலக்ட் செய்யப் படுகிறார்.

திரு. அ. ராகவ ரெட்டி : சர்ட்டிஃபிகேட் கொடுப்பது எந்த அடிப்படையில் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இப்போது சொன்ன ஆஃபீஸ்கள், டெபுடி தாசில்தார் . .

திரு. அ. ராகவ ரெட்டி : நேட்டிவிட்டி சர்டிஃபிகேட் எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகிறது?

கனம் சபாநாயகர் : நேட்டிவிட்டி சர்டிஃபிகேட்டா? அல்லது ரீபாட்ரியேஷன் சர்டிஃபிகேட்டா?

திரு. அ. ராகவ ரெட்டி : நேட்டிவிட்டி சர்ட்டிஃபிகேட் எந்த அடிப்படையில் கொடுக்கிறார்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தனியாகக் கேள்வி போட்டால் நன்றாக இருக்கும்.